# ஐ.தே.க. தோல்வியுற்றால் ஜனாதிபதி பிரேமதாசா

விலை ரூபா 4-50

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 83 சித்திரை 28 ஷவ்வால் 25 இதழ்: 90

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 11-5-1991

## பாதிக்கப்படுவார்!

[கொழும்பு]

இன்று நடைபெறும் உள்ளூராட்சித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியடையும் பட்சத்தில் அது ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸாவின் செல்வாக்குக்குச் சரிவையே

(4-ம் பக்கம் பார்க்க)

## மாதகல் கடலில் படகு தீப்பற்றி எரிந்தது

(யாழ்ப்பாணம்)

மாதகல் கடல்பகுதியில் நேற்று முன்தினமிரவு கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் படகு ஒன்று தீப்பற்றி எரிந்தது.

இவ்வனர்த்தத்தில் யார் செ

(4ம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் படையினர் மீது புலிகள் கடும் தாக்குதல்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மொறக்கொட்டாஞ்சேனை பகுதியில் நேற்று முன்தினம் காலை கடும் மோதல் இடம்பெற்றுள்ளது.

மொறக்கொட்டாஞ்சேனையிலிருந்து சித்தாண்டிப் பகுதி

(4-ம் பக்கம் பார்க்க)

# நிவாரணக்குழு மீண்டும் தாக்கப்பட்டால் இலங்கையுடனான உறவில் பெரும் சிக்கல் ஏற்படும்!

## பிரெஞ்சு அரசு இலங்கைக்கு கடுமையான எச்சரிக்கை!

(பாரிஸ்)

இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதியில் வைத்திய நிவாரணப்பணிகளில் ஈடுபட்டுவரும் பிரான்ஸ் நாட்டு நிவாரணக்குழு மீண்டும் இலங்கைப் படையினரால் தாக்கப்பட்டால் இலங்கைக்கும் பிரான்ஸுக்கும் உள்ள உறவில் பெரும் சிக்கல் ஏற்படும் இவ்வாறு பிரான்ஸ்நாட்டு அரசாங்கம் இலங்கைக்கு கடுமையாக எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

கடந்த மூன்றும் திகதி வவுனியா மாவட்டத்தில்பிரான்ஸ் வைத்தியக்குழு மீது இலங்கை விமானப்படை தாக்குதல் நடத்தியது குறித்து பிரான்ஸ் அரசாங்கம் இலங்கையை ஏற்கனவே எச்சரித்திருந்தது.

இதுபோல் இன்னுமொரு முறை தாக்குதல் நடைபெறுமானால் இலங்கைக்கும் பிரான்சுக்கும் உள்ள உறவில் பெரும் சிக்கல் ஏற்படுமென பிரான்ஸ் அரசாங்கம் இப்போது இலங்கையை கடுமையாக எச்சரித்திருக்கிறது.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் பணியில் ஈடுபட்டிருந்த பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஒரு டாக்டர் மற்றும் இருதாதியர் இலங்கை விமானப்படையின் குண்டு வீச்சில் காயமடைந்தது தெரிந்ததே. (பூ)

## ஓய்வுபெற்ற நீதியரசர் நியமனம்

[கொழும்பு]

கடந்த 3-ஆம் திகதி வவுனியா மாவட்டத்தில் ஸ்ரீலங்கா விமானப்படையினரால் பிரெஞ்சு நிவாரணக்

(4-ம் பக்கம் பார்க்க)

## லோக்சபா வேட்பாளர் சுட்டுக் கொலை

(சண்டிகார்)

பஞ்சாப் மாநிலத்தில் லோகசபைக்குப் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் நேற்று அடையாளம் தெரி

(4-ம் பக்கம் பார்க்க)

## 236 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் இன்று நடைபெறுகிறது
## 85 லட்சம் பேர் வாக்களிக்கத் தகுதி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் மாநகர சபைகள், நகரசபைகள், பிரதேச சபைகள் ஆகியவற்றுக்கான தேர்தல்கள் இன்று நடைபெறுகிறது.

இன்றைய தேர்தலில் 236 உள்ளூராட்சி சபைகளுக்கு மொத்தம் 8,533 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவார்கள். 15 ஆயிரத்துக்கும் கூடுதலான வேட்பாளர்கள் இந்தத் தேர்தல்களில் போட்டியிடுகிறார்கள். இவர்கள் 11 அரசியல் கட்சிகளையும் 82 சுயேட்சைக்

(4-ம் பக்கம் பார்க்க)

## வீரமரணம்

(திருமலை)

திருமலையில் நேற்று முன்தினம் இடம்பெற்றவெடிவிபத்தொன்றில் லெப்டினன்ட் ஜனகன் (தம்பலகாமம்) வீரமரணமடைந்தார். (வி)

## புலிகளின் கடும் தாக்குதலினால் வவுனியா மாவட்டத்தில் படையினர் பின்வாங்கினர்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் இரு பகுதிகளிலிருந்து விமானப் படையின் உதவியுடன் கனரக வாகனங்கள் சகிதம் முன்னேறிய படையினருக்கும், புலிகளுக்குமிடையில் நேற்று முன்தினம் கடும் மோதல் இடம்பெற்றது.

காலை 9-30 மணியளவில் கோழியாகுளம் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் பூவரசங்குளம் நோக்கிச் சென்றவேளை இடையில் வைத்துப் புலிகள் கடும் தாக்குதலை நடாத்தினர்.

இரு தரப்பினரிடையேயும் மோதல் சுமார் அரை மணி நேரம் நடைபெற்றது. புலிகளின் கடும் தாக்குதலுக்கு இலக்கான படையினர் பெருமளவு இழப்புகளுடன் பூவர

(4-ம் பக்கம் பார்க்க)

## மதுவிற்பனை நிலையங்கள் மூடப்பட்டன

(கொழும்பு)

இன்று நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலைமுன்னிட்டுதேர்தல்நடைபெறும்17 மாவட்டங்களிலுமுள்ள மதுவிற்பனை நிலையங்களும், கேளிக்கை விடுதிகளும் நேற்று முதல் மூடப்பட்டுள்ளன.

3 நாட்களுக்கு இவை மூடப்பட்டிருக்கும்.

## திருமலையிலுள்ள யான் ஓயா ஆற்றுநீர் வடமத்திய மாகாணத்துக்கு திசை திருப்பப்படுகிறது

[திருமலை]

திருகோணமலை மாவட்டத்திலுள்ள யான்ஓயா ஆற்றுநீரை மறித்து அணைகட்டி பதவியாக்குளத்திற்கு திருப்பிவிடும் நீர்ப்பாசனத் திட்டம் அடுத்த மாதம் நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்பட விருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் மூலம் வடமத்திய மாகாணத்திலுள்ள 12,500 ஏக்கர்களில் இருபோகமும்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஓமந்தையில் 3 படையினர் பலி

[வவுனியா]

வவுனியாவில் ஓமந்தைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற மோதலில்3படையினர் கொல்லப்பட்டதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 5 படையினர் படுகாயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் தற்போது கடும் மோதல் தொடர்ந்தும் இடம்பெறறு வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. [சி]

## பங்களாதேஷ் புயலில் நேற்றும் 100பேர்உயிரிழப்பு

(டாக்கா)

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவைச் சுற்றிய பகுதிகளில் நேற்றுமாலை வீசியபுயல் காற்றினால் குறைந்தது 100 பேர் இறந்துள்ளனர், 150பேர் காயமுற்றனர்.

ஆற்றில் படகில் சென்ற 15 பேர் ஆற்றில் மூழ்கி மரணமானார்கள்.

கடந்த இரு வாரங்களுக்கு முன்வீசிய புயலில் ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர் பலியாகியதும் 17 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டதும் தெரிந்ததே. (பூ)

## காரைநகர் மோதலில் 4 சிப்பாய் மரணம்

(கொழும்பு)

காரைநகரில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் 4 படையினர் கொல்லப்பட்டதாக அரசு தரப்பில் நேற்

(4-ம் பக்கம் பார்க்க)

11-5-1991

# வரிவிளம்பரம்

## தவறிவிட்டது

கிடத்தறபளை மிருசுவிலைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை பகவதி என்பவருடைய அடையாள அட்டை, பேர்ஸ், 200 ரூபா பணம் என்பன கோப்பாய்ச் சந்திக்கும் கைதடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (எ-1292)

## தரன் படப் பிடிப்பாளர்

கலர்-கறுப்பு வெள்ளைப் படங்கள், றபர் சீல், பிளாஸ்ரிக் வேலை, விளம்பர போட், புளொக் டிசைன் மற்றும் ஓவிய வேலைகள். தரன் படப் பிடிப்பாளர், 87, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி 4673)

## நவீன தையற்கலை

ஆண்களின் உடைகள் தைப்பதற்கு நவீன கட்டிங் படங்களும் விளக்கங்களும் வெளிவந்துள்ளது. பாலாஜி வெளியீடு. விலை ரூபா 39/- பாலாஜி புத்தகசாலை, 15/6, முதலாம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-4716)

## வைத்தியம்

வேலணை வைத்தியர் சிதம்பரப்பிள்ளை இராசரத்தினம் ஜே பி யாழ்ப்பாணத்தில் 121, இரண்டாம் குறுக்குத் தெருவில் வைத்தியசாலைக் கிளையை ஆரம்பித்துள்ளார். செங்கமாரி, சிறுபிள்ளைநோய்களில் திறமை பெற்றவர். சகல நோய்களுக்கும் சிகிச்சை பெறலாம். (சி-4715)

## சோபிதா புத்தகசாலை

யாழ். நகரில் நியாய விலைக்கு அப்பியாசக்கொப்பிகள், பாடநூல்கள், பாடசாலை உபகரணங்கள், மீரா வெளியீடுகள் அனைத்துக்கும் சிறந்த ஸ்தாபனம் சோபிதா புத்தகசாலை, 363, கே. கே. எஸ். வீதி (முட்டாசுக்கடைச் சந்தி), யாழ்ப்பாணம். (சி 4670)

## கப்பல் திரும்பியது

(பூநகரி)

வலைப்பாடு துறைமுகம் வந்த லங்கா சிறி கப்பல் கடும் காற்றுக் காரணமாக உணவுப் பொருள்களை இறக்காமல் காங்கேசன்துறைத் துறைமுகத்துக்குச் சென்றுள்ளது.

இதனால் வலைப்பாடு துறைமுகம் சென்ற 10 லொறிகள் வெறுமனே பூநகரிக்குத் திரும்பியுள்ளன, இதனால் பூநகரி பல நோ. கூ. சங்கத்

(4-ம் பக்கம் பார்க்க)

## திருநெல்வேலியில் ஈஸ்வராம்பா நினைவுதினம்

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீசத்தியசாயி சேவா சமித்தியின் பாலவிகாஸ் மாணவ மாணவிகளின் ஈஸ்வராம்பா நினைவு தினத்தையொட்டி நடைபெறும் இருவர் தின நிகழ்ச்சிகள் நாளை 12ம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலியிலுள்ள சாயி சேவா சமித்தி மண்டபத்தில் நடைபெறும்.

காலை முதல் மாலைவரை இறப்பு நிகழ்ச்சிகளும் எஸ். கே. எஸ். நாதனின் சிறப்பு நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

# நெருப்புத்தணல் பறந்து வீடு தீப்பற்றியது

(புங்குடுதீவு)

மதிய உணவு சமைத்துக் கொண்டிருந்த வேளை காற்றினால் அள்ளப்பட்ட நெருப்புத் தணல் வீட்டு ஓலைத்தட்டியில் பற்றிக்கொண்டதினால் வீடு ஒன்று எரிந்து சாம்பலானது.

அவ்வீட்டிலிருந்த மேசை, வாங்கு, உடுப்புப்பெட்டி மற்றும் பல பொருள்களை அப்புறப்படுத்த முடியாத நிலையில் முற்றாக எரிந்துள்ளது.

இச்சம்பவம் அண்மையில் புங்குடுதீவு கிழக்குப்பகுதியில் நிகழ்ந்துள்ளது.

புங்குடுதீவு 11-ம் வட்டாரத்திலுள்ள ம. விசிக் றெக்ஸ் என்பவரின் வீடே இவ்வாறாக எரிந்து சாம்பலானது. (101)

## இராசி பலன்

11-05-1991

சனிக்கிழமை

உத்தரட்டாதி மு. ப. 8-47 வரை. துவாதசி பி. ப. 3-37 வரை. இராகுகாலம் காலை 8-54 முதல் 10-24 வரை, சுப நேரம் பகல் 2-54 முதல் 4-24 வரை சனிப்பிரதோஷவிரதம்.

மேடம்: தப்பபிப்பிராயம், பணியாள் தகராறு, மனக் குறை.

இடபம்: வருமான அதிகரிப்பு, தொழிற்சிறப்பு, குடும்ப சுகம்.

மிதுனம்: அற்பர் நேசம், வேலைப்பளு, நண்பருதவி.

கடகம்; பண முடக்கம். தொழில்குறைவு, வாக்குக்கலகம்.

சிங்கம்: குடும்பத்தகராறு, காரிய அலைச்சல், வைத்தியச் செலவு.

கன்னி: அதிக பிரயாசம், குடும்பபிரிவு, ஆடம்பரச் செலவு

துலாம்: காரிய வெற்றி, பொதுப்பணி, அதிகாரிகள் பாராட்டு.

விருச்சிகம்; சுபகாரிய செலவு தொழில் நஷ்டம், தொலை;

தனுசு: ஏமாற்றம், நிம்மதிக்குறைவு, தொழில் கஷ்டம்;

மகரம்: நினைத்தது தாமதமாகும், பணவரவு, புத்திரச் சிறப்பு.

கும்பம்: பெண் பகை, அதிகாரிகள் சிரமம், மாமனூர் துன்பம்:

மீனம்: காரிய வெற்றி, குடும்ப மகிழ்ச்சி, திருமண யோகம்.

- ஜோஸ்யர்

## மாணவர் உதவி

(புங்குடுதீவு)

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் தங்கியுள்ள கர்ப்பிணித்தாய்மாருக்கும், ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களினால் நெஸ்பிறே பால்மா பைக்கற்றுகள் வழங்கப்பட்டுள்ளன. (101)

## யாருடையது?

யாழ். சின்னக்கடை வீதியில் பைல்கள், கொப்பிகள் அடங்கிய தஸ்தாவேஜுகள் சுதுமலையைச் சேர்ந்த ந. கந்தையா என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

## புதிய நிர்வாகிகள்

(பருத்தித்துறை)

அல்வாய் மேற்கு இளம்பிறை சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்-வே தம்பிஐயா, செயலாளர்-த. மோகன், பொருளாளர்-அ. ஐயன், உப தலைவர்- பொ. பார்த்திபன், உப செயலாளர்- க.குமணன், உப பொருளாளர் தி. சம்பந்தன், செயற்குழு உறுப்பினர்கள் கி. திரவியம், க. சிவலிங்கம், வி. வசந்தரூபன், கணக்குப் பரிசோதகர் செல்வி சி. மதிவதனி. (52)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# VACANCY

Applications are invited from the suitable candidates for the post of Community Development Trainer This training programme for about six selected trainees includes the following areas;

The medium of instruction will be in Tamil

(a) **Dairy Development**
(b) **Milk food preparation**
(c) **Soil testing**
(d) **Co-operative management**
(e) **Manure and Fertilizer Storage**
(f) **Seedling preparation**
(g) **Community animation, basic skills in community health and Community Development**

The above programme is for six (6) months. The candidates must have experience and relevant qualifications in the above fields

He should be able to reside at the training site for the six months (Quarters will be provided)

Very attractive salary will be paid according to qualifications and experience Not less than Rs. 20,000/- per month. Apply before 31st of May 1991, to

**The Director of Projects,**
Jaffna Diocese of the Church of South India,
DIOCESAN OFFICE; VADDUKODDAI.
(A 4721)

## பெண் காவல் துறையினருக்கான விண்ணப்பம்

(1) வயது எல்லை:
18 வயது முதல் 25 வயது வரை.
(2) உயரம்: 5 அடி 2 அங்குலம்
(3) கல்வித் தகைமை:
எட்டாம் வகுப்பு முதல் க. பொ. த. (சாதாரணம்) க.பொ.த. (உயர்தரம்) வரை.

விண்ணப்பதாரிகள் 15-05-91க்குள் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ். பிரதேசக்காரியாலயத்தில் சான்றிதழ்களுடன் சமுகமளிக்கவும்.

பொறுப்பாளர்
தமிழீழக் காவல்துறை.

(எ-1293)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் மன்றத்தின்

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் ப. ஏகாம்பரம்

(முன்னாள் அதிபர்)

நீண்டகால இரசாயனவியல்துறை, விளையாட்டுத் துறை என்பவற்றில் அளப்பரிய சேவையாற்றி ஈற்றில் அதிபராகவும் மிளிர்ந்து வெளிநாடு சென்று வாழ்ந்த பெரியார் அவர்களின் நிரந்தரப் பிரிவால் வேதனையுறும் முன்னாள் மாணவர், ஆசிரியர், நண்பர்கள் அனைவர் சார்பிலும் கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகிறோம். அவர் தம் உறவினர்க்கும் ஆறுதல் கூறுகிறோம்.

ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் மன்றம்.
(ஏ-1294) பருத்தித்துறை.

## உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்

பொது முகாமையாளர் 101/7

# பதவிக்கான விண்ணப்பம்

உடுப்பிட்டி ப. நோ. சங்கத்தில் மேற்காண் பதவிக்கு தகைமையுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பதவிக்கான விண்ணப்பங்கள் 23-5-91ம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன் சங்கப் பணிமனையில் கிடைக்கத்தக்கதாக பதிவுஞ்சலிலோ நேரிலோ தலைவர், உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம், வல்வெட்டித்துறை என்னும் முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

01. கல்வித் தகைமைகள்

அ. கூட்டுறவு ஊழியர் 8வது சம்பளத்திட்டத்தில் முகாமை அல்லது மேற்பார்வை மட்டத்தில் மூன்று வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 9வதுசம்பளத்திட்டத்தில் முகாமை அல்லது மேற்பார்வை மட்டத்தில் ஆறு வருடங்களுக்கு குறையாத அனுபவம்;

அல்லது

ஆ: அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெறப்பட்ட பட்டம் அல்லது சமமான தகுதிகளுடன் நான்கு வருடங்களுக்கு குறையாத முகாமைத்துவ அனுபவம் (அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனத்தில்/கைத்தொழில் நிறுவனத்தில்; பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

இ: கூட்டுறவுப் பணியாளர் (உயர்பிரிவு) தராதரப் பத்திரம் அல்லது க. பொ. த (உயர்பிரிவு) பரீட்சையில் மூன்று பாடங்களிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனம்/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் ஆறுவருடங்களுக்குக்குறையாத முகாமைத்துவ அனுபவம்

02. வயது:

25 வயது தொடக்கம் 45 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

03. சம்பள அளவுத் திட்டம்:

1105/- 2170/-
———————— மும் அங்கீகரிக்கப்பட்ட
60X4 - 75X11 படிகளும்

முக்கிய குறிப்பு:

1. சமீபத்தில் பெற்ற இரு நற்சாட்சிப்பத்திரங்களினதும் அனுபவ சான்றிதழ்களினதும் கல்விச் சான்றிதழ்களினதும், பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தினதும் பிரதிகள் யாவும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும்.
2. விண்ணப்பப் படிவங்களை சங்கப்பணிமனையில் கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்.
உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்

(ஏ-1291)

# இரசாயனப் பொருட்களை கவனமாக கையாளவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள சிறுதானிய உற்பத்தியாளர்கள், காய்கறிகள் உற்பத்தியாளர்கள் மற்றும் பருப்பு வகை உற்பத்தியாளர்கள் விவசாயஇரசாயனப் பொருட்களை மிகவும் கவனமாகக் கையாள வேண்டும். அத்துடன் மிகஅவசியமின்றி விவசாய இரசாயனப் பொருட்களை பயன்படுத்தலை தவிர்த்தலும் வேண்டுமென்று யாழ் மாவட்ட கமநலசேவைகள் திணைக்களத்தினர் தெரிவிக்கின்றனர்.

ஒருங்கிணைந்த பீடைகட்டுப்பாட்டு முறைகள் பின்பற்றப்பட்டால் மிகவும் விரும்பத்தக்க பலன்களை யாழ் விவசாயிகள் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.மாவட்ட கமநல சேவை நிலையங்களுக்கு ஊடாக தற்போது விவசாயிகளுக்கு உரயாவனையைக் கட்டுப் படுத்துவதற்கான காரணங்கள் மற்றும் உரபாவனைகள் போன்ற விடயங்கள் குறித்து கருத்தரங்குகள்மூலம் தெரிவிக்கப்படுகிறது (153)

# உயர்தரவகுப்பு பரீட்சை 15-ம்திகதி விண்ணப்ப முடிவு

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்புகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் இம் மாதம் 15ம் திகதிக்கு முன் பாடசாலை அதிபர்களுக்கு விண்ணப்பிக்கவேண்டும்.

இவ்வாறு யாழ் கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

இவர்கள் தேசிய பாடசாலைகள் தவிர்ந்த உயர்தர வகுப்புகள் உள்ள ஏனைய பாடசாலைகளுக்கு விண்ணப்பிக்கலாம். கணிதம், விஞ்ஞானம், சமூகக் கல்வி, தமிழ் ஆகிய பாடங்களில் போட்டிப் பரீட்சை வைத்து இவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

மாணவர்கள் கூடிய வாய்ப்பை பெறும் நோக்கத்துக்காக கல்வித்திணைக்களம் சில பாடசாலைகளுக்கு போட்டிப் பரீட்சைகள் மூலம் தேர்ந்தெடுப்பதற்கு பரீட்சை திகதியை அறிவித்திருக்கிறார்கள்.

இம் மாதம் 17ம் திகதியும் 18ம் திகதியும் (வெள்ளி, சனி) வேலணை வைத்தியலிங்கம் துரைசாமி ம. ம. வி, மகாஜன தெல்லிப்பளை, ஹாட்லி பருத்தித்துறை, சாவகச்சேரி இந்து, யாழ். இந்து மகளிர், மானிப்பாய் இந்துக்கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்ட் ஆகிய பாடசாலைகளில் நடைபெறும்.

இம் மாதம் 20ம் திகதியும் 21ம் திகதியும் (திங்கள், செவ்வாய்) யாழ் மத்திய கல்லூரி திருக்குடும்ப கன்னியர்மடம், மானிப்பாய் மகளிர்கல்லூரி, யாழ். கனகரத்தினம் ம. ம. வி, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் நடைபெறும்.

இம் மாதம் 23ம் திகதியும் 24ம் திகதியும் (வியாழன், வெள்ளி) கொக்குவில் இந்துக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில்நடைபெறும். உயர்தர வகுப்புகள் உள்ள மற்றைய பாடசாலைகள் தாங்கள் பரீட்சைகள் வைத்து

(4-ம் பக்கம் பார்க்க)

# விவசாயிகளுக்கு தரமான விதைகள் வழங்க ஏற்பாடு

(பண்டத்தரிப்பு)

நல்ல தரமான விதைகள் விவசாயிகளுக்கு இலகுவாக கிடைப்பதற்காக தொல்புரம் கமநலசேவை நிலைய பிரதேசத்தில் நான்கு இடங்களில்குரக்கன், பயறு ஆகியன சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவியுடன் பயிரிடப்பட்டுள்ளன.

கடந்த போகத்தின்போது நல்ல தரமான விதைகளுக்கு தட்டுப்பாடு நிலவியதால் எதிர்வரும்போகத்திற்கு நல்ல தரமான விதை இனங்களை விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற குறிக்கோளுடன் இப்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தொல்புரம் விவசாயப் போதனாசிரியர் திரு. வி. செல்வநாயகம் தெரிவித்தார்.

பண்டத்தரிப்பு, தொட்டிலடி, பண்ணாகம், வட்டுக்கோட்டை ஆகிய நான்கு இடங்களில் விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு இவை பயிரிடப் பட்டுள்ளதாகவும் இந்த செய்கைக்கென விதை, உரம், மண்ணெண்ணை ஆகியன வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகள் தாங்கள் உற்பத்திசெய்யும் குரக்கன், பயறு ஆகிய விதைகளில் ஒரு குறிப்பிட்ட தொகையை விவசாயத் திணைக்களத்திற்கு விலைக்கு கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (72)

## கௌரவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில்கலாநிதி பட்டம்பெற்ற கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளையை கௌரவித்து நாளை 12ம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை யாழ் இந்துக் கல்லூரியில் தேநீர் விருந்துபசாரம் நடைபெறவுள்ளது

# இலவச பயிற்சி வகுப்பு ஜூனில் ஆரம்பம்

[கொக்குவில்]

வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கம், தொழிலாளர்களினதும், உற்பத்தியாளர்களினதும் படித்த வேலையற்றிருக்கும் பெண் பிள்ளைகளுக்கு தையல் பயிற்சி தட்டச்சு, வாழைநார் உற்பத்திப் பொருட்கள், பனைஓலை கைப்பணி போன்ற இலவச பயிற்சி வகுப்புகளை நடாத்த முன்வந்துள்ளது.

இதற்கான சகல ஒழுங்குகளும் ஜூன் முதலாம் திகதி முதல் ஆரம்பமாக விருப்பதால் விண்ணப்பங்களை சங்க பணிமனையில் கையளிக்கும்படி கேட்டுள்ளனர்.

இந் நடவடிக்கை வறுமைக் கோட்டுக்குள் இருப்போருக்கு பெரும் நன்மையளிக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [135]

## சமாச கூட்டம்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்தின் யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேசசபையின் ஆட்சிக் குழுக்கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2-30மணிக்கு பாஷையூர் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச்சங்கப்பணிமனையில் தலைவர் திரு. செ. கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ளது. (154)

# 'திரிபோஷ' மா வழங்கப்படவில்லை

(காங்கேசன்துறை)

சுகாதாரப் பகுதியின் தாய், சேய் நல சிகிச்சை நிலையங்களில் வழங்கப்பட்டு வந்த "திரிபோஷ" மா கடந்த 2 மாதங்களாக வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பிலிருந்து 'திரிபோஷ' வந்து சேராமையால் அதனை வழங்க முடியாதுள்ளதாக சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர்.

இதேவேளை ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவியினால் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட ஜீவாகாரம் கடந்த 2 மாதத்தில் ஒருதடவை விநியோகம் செய்யப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (86)

# 'காங்கிரஸ் ஆட்சியில் அரசியல் தலையீடிராது'

(சென்னை)

"அரசியல் தலையீடின்றி ஆட்சியை தூய்மையாக நடத்த இந்திரா காங்கிரஸ் கட்சி பாடுபடும்."

இந்திரா காங்கிரஸ் கட்சி நேற்று சென்னையில் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

தேர்தல் அறிக்கை வெளியிட்டு வைத்த அக்கட்சியின் தமிழ்நாடு தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி அதன் கொள்கை விளக்கத்தை பத்திரிகையாளர்க்கு விளக்கிக் கூறுகையில் சிறுபான்மையோர் நலன் மற்றும் பின்தங்கியோர் நல்வாழ்வு பற்றியும் கட்சி பாடுபடும் என்றார் (பூ)

## பரீட்சையில் சித்தி

[மானிப்பாய்]

பொது எழுதுவினைஞர் சேவையில் அதிசிறப்புவிசேட போட்டிப்பரீட்சையில் (சுப்பிரு, யாழ். செயலகத்தைச் சேர்ந்த இருவர் சித்தியடைந்துள்ளனர்.

1989ம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற இப்போட்டிப் பரீட்சையில் உணவுக்கட்டுப்பாட்டுக்கிளையில் பணிபுரியும் திரு. வி. எஸ். எஸ், செல்வராசா புனர்வாழ்வுப்பகுதியில் பணிபுரியும் செல்வி ஆர். எஸ். துரைராசா ஆகிய இருவருமே சித்தியடைந்தவர்களாவர். [71]

★ வடக்கு - கிழக்கு நிவாரணம்

# நிதியுதவும் நாடுகளுடன் தொண்டர் ஸ்தாபனங்கள் தொடர்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள அகதிகளுக்கு உணவு மற்றும் நிவாரணப் பொருட்களை கொண்டுசெல்லுவதில் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து பல தொண்டர் ஸ்தாபனங்கள் தமக்கு நிதியுதவி வழங்கும் வெளிநாடுகளுக்கு அறிவித்திருப்பதாக தெரியவருகின்றது.

வடக்கிலுள்ள அகதிகளுக்கு சிறிலங்கா அரசு கப்பலில் கொண்டு செல்லும் உணவுப் பொருட்கள் போதுமானதாக இல்லாத காரணத்தினால் தனியார் தொண்டர் ஸ்தாபனங்களின் சேவைகள் கோரப்பட்டுள்ளன.

உரிய அனுமதிப் பத்திரங்களுடன் லொறிகளில் கொண்டுசெல்லப்படும் உணவுப்பொருட்கள் கூட சிறிலங்கா பாதுகாப்புப் படையினரால் பல நாட்கள் தடுத்து வைக்கப்படுவதாகவும் இதனால் மருந்துகளும், ஏனைய சில உணவுப் பொருட்களும் தரம் இழந்துவிடுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தொண்டர் ஸ்தாபன பிரதிநிதிகள் லொறிகள் மூலம் அகதிகளுக்கு உணவுப்பொருட்கள் கொண்டு செல்கையில் சிறிலங்கா பாதுகாப்புப்படையினரால் தாக்குதல் நடத்தப்பட்ட சில சம்பவங்கள் குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (153)

# யாழ். இந்து, வேம்படியில் அனுமதி இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக்கல்லூரி, யாழ். வேம்படி மகளிர் கல்லூரி ஆகிய தேசிய பாடசாலைகளுக்கு 1993-ம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்புகள் தொடங்குவதற்கு போட்டிப் பரீட்சை மூலம் வெளி மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படமாட்டார்கள்.

இவ்வாறு யாழ் கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:

இப்போது தேசிய பாடசாலைகளில் அங்குள்ள மாணவர்கள் மாத்திரமே பரீட்சை ஒன்று வைத்து பெறுபேறுகளின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்டு புதிய வகுப்புகள் ஆரம்பிக்கப்படும். மிகுதி வெற்றிடங்கள் கல்விப் பொதுத்தராதர சாதாரண 1990ம் ஆண்டு பரீட்சை பெறுபேறுகளின்படி பிற பாடசாலையில் கல்விபயின்ற திறமையுள்ள மாணவர்களுக்கு வழங்குவதற்காக ஒதுக்கி வைக்கப்படும் என்றார். (125)

# தென் கொரிய அரசைக் கலைக்கக் கோரிக்கை

(சியோல்)

தென் கொரிய அரசாங்கம் கலைக்கப்படவேண்டுமென கடந்த ஒரு வாரமாக நடந்து வரும் கலகத்தை அடக்க 50 ஆயிரம் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இன்று ஒரு லட்சம் ஆர்ப்பாட்டக்காரர்கள் நகரின் பல இடங்களிலும் கூடி ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளனர். இதை முறியடிக்கவே அரசு பொலிசாரை கூடுதலான கடமையில் ஈடுபடுத்தியுள்ளது. (பூ)

# யாழ். மாநகர சபைக்கு வரியிறுப்பாளரிடமிருந்து 200 லட்சம் ரூபா வருமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குள் இருக்கும் வரியிறுப்பாளர்களிடமிருந்து சோலைவரி, மின்சாரக் கட்டணம் ஆகியவற்றுக் யாழ். மாநகரசபைக்கு 200 லட்சம் ரூபா வரவேண்டியுள்ளது.

இவ்வாறு யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது;

இதனால் மாநகரசபை பல கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளது. ஊழியர்களுக்கு சம்பளம் கொடுப்பது, பல அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவது முட்டுக்கட்டையாக உள்ளது என்றார். (152)

## கப்பல் திரும்பியது

(2ம் பக்கத் தொடர்ச்சி)

திற்கும் தனியார் லொறிகளுக்கும் போக்குவரத்து செலவு ஏற்பட்டுள்ளது. (23)

# கொடும்பாவி கொண்டு செல்லத் தடை

(சென்னை)

தேர்தல் பிரசாரம் செய்வோர், கட்சித் தலைவர்களின் அல்லது வேட்பாளர்களின் கொடும்பாவிகளை கொண்டு செல்வதும் எரிப்பதும் தடை செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை வேட்பாளர்களுக்கு ஆதரவு தேடும்வகையில் விளம்பரம் செய்யாமல் தடுக்கும்வகையில் 18 தூரதர்சன் ஒளிபரப்பு விளம்பரமுகவர்கள் பிரசார விளம்பரங்களை நிறுத்தியுள்ளனர். (பூ)

### வடக்கு கிழக்கில்
# தேசிய பயிலுநர் சபையின் மாவட்ட அலுவலகங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மாவட்டங்களிலும் தேசிய தொழில் பயிலுநர் சபையின் மாவட்ட அலுவலகங்கள் அமைக்கப்படவுள்ளன. மாவட்ட அடிப்படையில் தேசிய தொழில் பயிலுநர் சபையின் தொழிற் பயிற்சித் திட்டங்களை விரிவுபடுத்தும் முகமாக இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுவரையும் தொழில் பயிலுநர் சபைக்கு மாவட்ட அலுவலகங்கள் இருக்கவில்லை. கொழும்பிலுள்ள தலைமை அலுவலகம் மட்டுமே முழு மாவட்டக் கருமங்களையும் மேற்கொண்டு வந்தது.

அண்மையில் கண்டி, இரத்தினபுரி, அனுராதபுரம் மாவட்டங்களில் மாவட்ட அலுவலகங்கள் திறந்துவைக்கப்பட்டுள்ளன. [54]

# புதிய மருந்துகலவையாளர் 9 பேர் நியமனம்

[பண்டத்தரிப்பு]

யாழ். சுகாதார பிராந்தியத்திலுள்ள அரசாங்க வைத்தி சாலைகளில் நிலவும் மருந்துக் கலவையாளர்கள் பற்றாக்குறையை நீக்குமுகமாக ஒன்பது புதிய மருந்துக்கலவையாளர்களுக்கு நியமனம்வழங்கப்பட்டுள்ளது.

இவர்களில் ஐந்து பேர் பெண்களாவர். கடந்த ஆண்டில் இவர்களுக்கு ஒன்பது மாதகால மருந்தகப் பயிற்சி வழங்கப்பட்ட பின்னர் இப்பிராந்தியத்திலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் வெற்றிடங்களுக்கு நேற்று 10ம்திகதி தொடக்கம் தங்கள் கடமையை பொறுப்பேற்கும்படி நியமனம் வழங்கப்பட்டுள்ளது. [72]

## இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள தொழிலாளர் கல்வி நெறி விரிவுரைகள் இன்று சனிக்கிழமை காலை ஆரம்பமாகவுள்ளது.

தொழிலாளர் கல்வி நெறி ஒரு வருடம் முழுவதும் சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் விரிவுரைகள் இடம் பெறவிருக்கிறது. (153)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச சென். ஜோன் அம்புலன்ஸ்படை அத்தியட்சகர் பிரிவின் நிர்வாக குழு தெரிவுசெய்வதற்கான கூட்டம் யாழ். இந்துக் கல்லூரியில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4-00 மணிக்கு நடைபெறவுள்ளது. இக்கூட்டத்துக்கு யாழ்.பிரதேசஆணையாளர் இல.1 சகல சென் ஜோன் அம்புலன்ஸ் அங்கத்தவர்களையும் சமுகம்கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறார்.

## 236 உள்ளூராட்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குழுக்களையும் பிரதிநிதித்துவம் செய்கிறார்கள்.

சுமார் 85 லட்சம் பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்கள் இன்று வாக்களிக்கத் தகுதி பெற்றிருக்கின்றனர்.

7 ஆயிரத்து நானூற்றி தொண்ணூறு வாக்களிப்பு நிலையங்களில் காலை 7 மணியிலிருந்து மாலை 4 மணிவரை இந்த வாக்களிப்பு இடம் பெறும்.

இத்தேர்தலுக்காக 70 ஆயிரம் உத்தியோகத்தர்கள் தேர்தல் பணியில் ஈடுபடுவர்.

17 மாவட்டங்களுக்கும் தேர்தல் உத்தியோகத்தர்கள் ஏற்கனவேசென்று கடமையை ஏற்றுள்ளனர்.

பாதுகாப்பை முன்னிட்டு 50 ஆயிரம் பொலிசார் தேர்தல் கடமையில் உள்ளனர். அதோடு விசேட நடமாடும் பொலிசார் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர்.

தேர்தல் நடைபெறும் 7 மாகாணங்களிலும் அவசரகாலச் சட்டவிதிகள் சில தளர்த்தப்பட்டுள்ளன.

தேர்தல் பெறுபேறுகள் இன்றிரவு வானொலி மற்றும் தொலைக் காட்சிமூலம் ஒலி-ஒளிபரப்பு செய்யப்படும். இரவு 12 மணியிலிருந்து முடிவுகள் வெளியாகும் வரை இச்சேவை இடம்பெறும். (பூ)

## காரைநகர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

றிரவு தெரிவிக்கப்பட்டது.

இம்மோதலின் போது பாடசாலை மாணவிகள் இருவரும்பொது மக்கள் நால்வரும் கொல்லப்பட்டதாகவும் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

எனினும் இச்சம்பவம் எப்போது இடம்பெற்றது என்பது பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

## உயர்தர வகுப்பு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்களை அனுமதிக்கலாம்.

புதிய வகுப்புகள் இம்மாதம் 29ம் திகதி ஆரம்பிக்கவேண்டும். சாதாரண படிவத்தில் தங்கள் விண்ணப்பங்களை அனுப்பிவைக்கலாம் என்றார். (152)

## ஐ. தே. க.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்துக்காட்டும்என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

எனவே இத்தேர்தலில் ஐ. தே. க.வுக்கும் கிடைக்கப்படும் வெற்றியும், தோல்வியும் ஐ. தே. கவை விட ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸாவையே அதிகமாகப் பாதிக்கும் எனத் தெரிகிறது.

ஐக்கிய தேசியக்கட்சி 1989 இல் மீண்டும் ஆட்சிக்குவந்த பின்னர் குறிப்பாக ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா பதவி ஏற்றபின்பு நாடு எதிர்கொள்ளும் முதல் பொதுத்தேர்தல் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மாதகல்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

றார்கள் என்பது அவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பது பற்றியும் எதுவும் தெரியவரவில்லை.

கடற்படையினரின் தாக்குதலுக்கிலக்கான இந்த படகு சிலமணிநேரம் கொழுந்து விட்டு எரிந்தது. (சி)

## திருமலையிலுள்ள

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நெற்செய்கை செய்யக் கூடிய சூழ்நிலை ஏற்படவிருக்கிறது.

இங்கு புதிதாகக் குடியேற்றத் திட்டங்களும் உருவாகக் கூடியநிலை ஏற்படவிருப்பதாகவும் கூறப்படுகிறது. [153]

### வன்னிப் பகுதியிலிருந்து
# நெல் கொள்வனவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ப. நோ. கூ. சங்கம் இம்மாதம் 12ந் திகதி முதல் வன்னிமாவட்டத்திலிருந்து நெல் கொள்வனவு செய்யவிருக்கிறது.

அத்துடன் கௌபி, உழுந்து ஆகியவற்றையும் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவிருக்கிறது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் இது சம்பந்தமாக தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. நெல் கொள்வனவு சம்பந்தமாக குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது

தீவகத்திலிருந்து இடம் பெயர்ந்து வந்துள்ள ப. நோ. கூ. சங்கங்கள் தமது அங்கத்தவர்களுக்கு உலர் உணவு விநியோகம் செய்வதற்கு போதியளவு கிளைகளைத் திறப்பதற்கும் நடவடிக்கை எடுக்கவிருக்கிறது. (153)

## லோக்சபா

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யாத நபரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அகாலிதள் சார்பில் போட்டியிடும் கதர்சிங் என்பவரே கொலைசெய்யப்பட்டவராவர்.

இதனையடுத்து அத்தொகுதிக்கான தேர்தல் ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

இதற்குமுன் சட்டசபைக்கு போட்டியிடும் 5 வேட்பாளர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதும், அதைத் தொடர்ந்து அத்தொகுதிக்கான சட்டசபைத் தேர்தல் ரத்துச்செய்யப்பட்டதும் தெரிந்ததே.(பூ)

## புலிகளின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சங்குளம்பகுதியை வந்தடைந்தனர்.

பூவரசங் குளத்திலிருந்து படையினர் மீண்டும் பிற்பகல் 2-45 மணியளவில் 'பவள்' கவசவாகனம், ட்ரக் வண்டி சகிதம் பாலபோட்டைப் பகுதியை நோக்கி முன்னேறினர். இவர்களுக்கு உதவியாக 2 பொம்மர், 2 அவ்ரோ, 2 பயணிகள் விமானங்கள் கடும் தாக்குதலை நடாத்தின.

இருமுனைத் தாக்குதல் மத்தியில் முன்னேறிவந்த படையினர் மீது மாதர்பணிக்கமகிழம்குளம் பகுதியில் வைத்து புலிகள் ஆர். பி. ஜி. தாக்குதலை மேற்கொண்டனர். இதனால் 'பவள்' கவசவாகனம் பலத்த சேதமடைந்தது. இவ்வாகனத்தை ஏனைய வாகனங்களின் உதவியுடன் படையினர் கோழியாகுளத்திற்குக் கொண்டு சென்றுள்ளனர்.

பிற்பகல் 2-45 மணிக்கு ஆரம்பமான இம்மோதல் மாலை 5-30 மணி வரை நீடித்தது. படையினர் பின் மாதர் பணிக்கமகிழம்குளம் கூட்டுறவுச் சங்கத்தில் நிலைகொண்டனர். இம்மோதலில் புலிகள் தரப்பில் வீரவேங்கை மனோஜ் (யாழ்ப்பாணம்) வீரமரணமடைந்தார். [சி-வி]

## கிழக்கில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நோக்கி காலை 7-22 மணியளவில்படையினர் சென்றபோது புலிகள் 'கிளேமர்' தாக்குதலை மேற்கொண்டனர். (வி)

## ஓய்வு பெற்ற

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குழு மீது நடத்தப்பட்ட தாக்குதலை விசாரிக்க ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் லூஷன் அல்விஸ் நியமிக்கப்பட்டுள்ளார். [பூ]

## பெண் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

குப்பிளான் பகுதி தோட்டத்தில் வெங்காயம் பிடுங்கிக் கொண்டிருந்த பெண்கள் மீது பலாலியிருந்து படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு பெண் படுகாயமுற்று யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார், ஏனையோர் காயமின்றி தப்பினர்.

குப்பிளான் பங்கிருட்டியைச் சேர்ந்த திருமதி பார்வதி நாகப்பிள்ளை (49 வயது) என்பவரே காயப்பட்டு சிகிச்சைபெற்று வருபவராவார். [56]

# மரண அறிவித்தல்

## திருமதி வள்ளியம்மை சபாபதி

திருமதி வள்ளியம்மை சபாபதி 2-5-91இல் கனடாவில் காலமாகிவிட்டார். அன்னார் காலம்சென்ற சபாபதியின் அன்பு மனைவியும், செல்லம்மா, ஆனந்தன், இராஜேஸ்வரி, கனகசபை, ரவீந்திரன் ஆகியோரின் அருமை தாயாரும், ராசையா இராசம்மா, பாலசிங்கம், வசந்தி, சசிகலா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- திருமதி ஆனந்தன்

அராலி வடக்கு,
செட்டியாமடம், (சி-4722)

## திரு. கா. சயலொளிபவன்

இளைப்பாறிய கார்த்திகேசு சயலொளிபவன் (R.M.P) 9-5-91 கொழும்பில் காலமானார். இவர் காலம்சென்ற உடுவில் கார்த்திகேசு இராசம்மா தம்பதிகளின் அருமைப் புதல்வனும் 70, மானிப்பாய் வீதி சிவன் கிளினிக் உரிமையாளரும், காலம் சென்ற வண்ணார்பண்ணை முத்துக்குமாரு தம்பதிகளின் அன்பு மருமகனும் மகேஸ்வரியின் அன்புக்கணவரும், திருமதி பஞ்சாட்சரம் கலைவாணி, திருமதி வைத்தியநாதன் சிறிவாணி, டாக்டர் திலலொளிபவனின் அன்புத் தந்தையும் திரு. பஞ்சாட்சரம் (என்ஜினியர் கட்டார்) திரு. வைத்தியநாதன் (கணக்காளர்) திருமதி திலலொளிபவனின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற அரிநேசராசா, அரிநேசராணி, அரிநேசரட்ணம், ஓய்வு பெற்ற கா. அரிநேசகுகன் சிவன் பண்ணை வீதி ஓய்வு பெற்ற கா. அரிநேசலிங்கம் (U. K.) கா. கணேசதாசன் அதிபர் இந்து மகா வித்தியாலயம் கொழும்புத்துறை, ஆகியோரின் அன்புச் சகோதரரும் புனித யோன் பொஸ்கோ, சுண்டிக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த செல்வி ஹிவாணி வைத்தியநாதனின் அன்புப் பேரனுமாவார். K.K.S. Rd முத்துக்குமாரு அன்சன்ஸ் நகைக்கடை உரிமையாளர் மு. கனகரத்தினம், திசா ரொயிஸ் உரிமையாளர் மு.ஜெகதீசன் என்போரின் அன்பு மைத்துனருமாவார் அன்னாரின் பூதவுடல் 10-5-91 மாலை கொழும்பில் நல்லடக்கம் செய்யப்பட்டது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்; திரு. கா. கணேசதாசன்
சகோதரர்

(சி- 4720)

# மரண அறிவித்தல்

## சின்னப்பு முருகேசு

அராலி வடக்கு மகேந்திரன் வீதியை வதிப்பிடமாகக் கொண்ட சின்னப்பு முருகேசு காலமாகிவிட்டார். இவர் தவமணியின் அன்புக் கணவரும், தெய்வேந்திரன், யோகேந்திரன் [இரசாயனப்பகுதி, யாழ். பல்கலைக்கழகம்], சிவனேஸ்வரன், விக்கினேஸ்வரன் [பராமரிப்புப் பகுதி, யாழ். பல்கலைக்கழகம்], மகேந்திரன் [மாவீரர் 2-வது லெப். ஜேசு], தங்கமலர், கிருபாமணி, பூமணி, மனோன்மணி, ராசமணி ஆகியோரின் தந்தையும், தர்மலிங்கம், பூர்வீகநாதன் [பாதுகாப்பு உத்தியோகத்தர், கொழும்பு], விஜயரட்ணம், நவரட்ணம், பூங்கிளி, கலா [கட்டிடத் திணைக்களம், கொக்குவில்] ஆகியோரின் மாமனாரும், சகுந்தலா, உருத்திரன், பகீரதன், அஜந்தா, இனிதா, தயாளினி, தயாநிதி, தவசீலன், தர்மசீலன், கிருபாகரன், சசிகரன், மௌனிலா, நிலாசினி, சுபஜினி, சசிரேகா, தர்ஷிக்கா, விஜயகுமார், ரமேஸ்குமார், சதீஸ்குமார், வினோதினி, ராதிக்கா, ரேணுகா ஆகியோரின் அன்புப்பேரனுமாவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று [11-5-91] சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் மகேந்திரன் வீதியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அராலி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை. 

தகவல்:
மனைவி, பிள்ளைகள்
[சி 4723]

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு மே மாதம் 11ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Regestered as a News Paper at the General Post office Sri Lanka under licence number B/100806/81.